**செ.வெ.எண்: 88** **நாள்:30.08.2016**

**மாநில அளவில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் மாநில அளவில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ஜெ.லோகநாதன்,இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் 29.08.2016 அன்று நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்து தெரிவித்து கூறியதாவது:

சேலத்தில் மாநில அளவிலான நீச்சல் போட்டி நடைபெற்றது. இதில் நமது மாவட்டத்தில் உள்ள மாவட்ட விளையாட்டரங்க நீச்சல் குளத்தில் பயிற்சி பெற்ற கார்த்திக், சக்திசிவானி, முகம்மதுரித்வான், ஸ்வர்ணா, நிர்மல்குமார் ஆகிய வீரர், வீராங்கனைகள் 50மீ, 25மீ, 100மீ, 200மீ ஆகிய பிரிவு நீச்சல் போட்டியில் கலந்து கொண்டு 2ம் இடம் மற்றும் 3ம் இடத்தை பெற்று பதக்கங்களை வென்று சாதனை புரிந்துள்ளனர். மேலும் மண்டல அளவில் நடைபெறும் நீச்சல் போட்டியில் பங்கெடுத்து வெற்றி பெற்று நமது மாநிலத்திற்கும், நமது மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்க வாழ்த்து தெரிவிக்கப்பட்டது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.எஸ்.வாஞ்சிநாதன், நீச்சல் பயிற்றுநர் திரு.சோலைமணி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**